# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No. 48/2020 Date: 15.04.2025

PW1-தங்கவேல்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வா.சா.ஆ.1 ல் நான் கையெழுத்து செய்துள்ளேன். எனக்கு முன்பு அதில் வேறு யாரும் கையெழுத்து செய்யவில்லை. எங்கு வைத்து கிரையம் பேசப்பட்டது என்ற விவரத்தை நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் சாட்சிகளின் முகவரியையும் நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் கையெழுத்து செய்தவர்களை என்னால் வரிசைக்கிரமமாக என்னால் சொல்லமுடியாது என்றால் அனைவரும் ஒரே சமயத்தில் தான் கையெழுத்து செய்தோம். நான் எனக்கும், சிதம்பரத்திற்கும் உள்ள உறவுமுறையை பொய்யாக சொல்லியுள்ளதால் என்னுடைய சாட்சியையே ஏற்க முடியாது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-தங்கவேல்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.